www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 7

தேர்வு எண்

# மூன்றாம் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு(SA)-2024-25

நேரம் : 2.00 மணி] **அறிவியல்** [மொத்த மதிப்பெண்கள் : 60

பகுதி - I

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 10x1=10

1. ஒளி என்பது ஒரு வகை --------
   அ) பொருள் ஆ) ஆற்றல் இ) ஊடகம் ஈ) துகள்
2. கீழ்க்காணும் எப்பொருள், ஒளியை நன்கு எதிரொளிக்கும்?
   அ) பிளாஸ்டிக் தட்டு ஆ) சமதள ஆடி இ) சுவர் ஈ) காகிதம்
3. -------- தொலை நோக்கியைக் கண்டறிந்தார்.
   அ) ஹான் லிப்பேர்ஷே ஆ) கலிலியோ
   இ) நிக்கோலஸ் காப்பர்நிக்கஸ் ஈ) தாலமஸ்
4. -------- துணைக் கோளை நிறுவியவுடன் ISRO 4- டன் எடையுடைய துணைக்கோள்களை ஏவும் திறன் பெறுகிறது.
   அ) GSAT- 13 ஆ) GSAT- 14 இ) GSAT- 17 ஈ) GSAT- 19
5. மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் இழை -------- ஆகும்.
   அ) நைலான் ஆ) பாலியெஸ்டர் இ) ரேயான் ஈ) பஞ்சு
6. PET என்பது --------- இன் சுருக்கெழுத்தாகும்.
   அ) பாலியெஸ்டர் ஆ) பாலியெஸ்டர் மற்றும் டெரிலின்
   இ) பாலிஎத்திலின் டெரிப்தாலேட் ஈ) பாலித்தின்டெரிலின்
7. ஆஸ்பிரின் ஒரு ---------
   அ) ஆண்டிபயாடிக் ஆ) ஆண்டிபைரடிக் இ) மயக்க மருந்து ஈ) சைக்கீடெலிக்
8. மெழுகுவத்தியின் சுடரில் வெப்பமான பகுதி எது ----------
   அ) நீலம் ஆ) மஞ்சள் இ) கருப்பு ஈ) உள் பகுதி
9. பட்டுப்பூச்சிகளை வளர்ப்பதும், பட்டு இழைகளை உருவாக்குவதும் இவ்வாறு அழைக்கப்படுகிறது.
   அ) ஹார்ட்டிகல்சர் ஆ) ஃபுளோரிகல்சர் இ) அக்ரிகல்சர் ஈ) செரிகல்சர்
10. ஆவணத்தைச் சேமிக்க மெனு பயன்படுகிறது.
    அ) File → open ஆ) file → print இ) file → save ஈ) file→ close

பகுதி - II

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5x1=5

11. ஒரு வெள்ளொளி ஆனது, ஏழு வண்ணங்களாகப் பிரிகையடையும் நிகழ்வு -------- எனப்படும்.
12. இந்தியா ஏவிய முதல் ஏவுகணை --------- ஆகும்.
13. முழுமையான இயற்கை இழையின் எடுத்துக்காட்டு --------- ஆகும்.
14. உலக ORS தினம் ---------
15. ஆந்தராக்ஸ் நோயை உண்டாக்குவது ---------

பகுதி - III

**III. சரியா,தவறா. தவறெனில் திருத்தி எழுதுக.** 5x1=5

16. சூரிய ஒளியானது, நீர்த்துளிகளின் மூலம் நிறப்பிரிகை அடைந்து வானவில் தோன்றுகிறது.
17. நமது பால்வெளித் திரளானது நீள்வட்ட விண்மீன் திரள் ஆகும்.
18. பருத்தி என்பது ஓர் இயற்கையான பாலிமர் ஆகும்.
19. எரிதலுக்கு ஆக்ஸிஜன் அவசியம்.
20. பட்டுப்பூச்சி கம்பளி இழைகளைத் தருகிறது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## பகுதி - IV

**IV. பொருத்துக.** 5x1=5

21. ரோகிணி - GSLV-Mark III
22. GSAT-14 - GSLV Mark III M1
23. GSAT-19 - SLV-3
24. சந்திரயான்-2 - PSLV-XL C25
25. மங்கள்யான் - GSLV-D5

## பகுதி - V

**V. ஏவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி.** 10x2=20

26. ஒளிரும் பொருள்கள் என்றால் என்ன?
27. முப்பட்டகம் என்றால் என்ன?
28. அ) பழைய நட்சத்திரங்கள் : நீள்வட்ட விண்மீன் திரள் :: புது நட்சத்திரங்கள் :--------------
    ஆ) அருகிலுள்ள விண்மீன் திரள் : ஆண்ட்ரமெடா :: அருகிலுள்ள நட்சத்திரம் :------- -------.
29. நான்கு வகையான விண்மீன் திரள்களின் பெயர்களைக் கூறுக.
30. PSLV மற்றும் GSLV யின் விரிவாக்கம் தருக.
31. நெகிழிப் பொருள்களைத் தவிர்ப்பது எவ்வாறு சிறந்த முறையாகும்.
32. 5 R கொள்கை என்பது என்ன?
33. கிருமிநாசினிகள் ஆண்டிசெப்டிக்லிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன? எடுத்துக்காட்டுடன் விளக்கவும்.
34. 4.5 கிலோ எரிபொருள் முழுவதுமாக எரிந்து, உற்பத்தி செய்யப்படும் வெப்பத்தின் அளவு 1,80,000 Kg என அளவிடப்படுகிறது என்றால், கலோரிஃபிக் மதிப்பு என்ன?
35. டெட்டாலின் முக்கியக் கூறுகள் யாவை?
36. கம்பளியின் சிறப்பம்சங்கள் மூன்றினை எழுதுக.
37. பட்டின் ஏதேனும் மூன்று பயன்பாட்டை எழுதுக.
38. கூற்றும் காரணமும்.
    கூற்று : பெனிசிலின் மற்றும் சிப்ரோஃப்ளோக்சாசின்
    காரணம் : இந்த மருந்துகள் பசு அம்மையை குணமாக்கும்.
    அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி
    இ) கூற்றும் தவறு, காரணமும் தவறு ஈ) கூற்றும் சரி, காரணமும் சரி
39. உரையை தேர்ந்தெடுத்தல் என்றால் என்ன?
40. ஏற்கனவே உள்ள ஒரு ஆவணத்தை திறப்பது எப்படி?

## பகுதி - VI

**VI. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 3x5=15

41. அ) பின்வருவனவற்றை வரையறுக்க.
    i) படுகதிர் ii) எதிரொளிப்புக்கதிர் iii) குத்துக்கோடு
    iv) படுகோணம் v) எதிரொளிப்புக்கோணம்
    (அல்லது)
    ஆ) விண்மீன் மண்டலத்தைக் குறித்து சிறுகுறிப்பு வரைக.
42. அ) செயற்கை இழைகளின் பயன்களையும், வரம்புகளையும் பட்டியலிடுக.
    (அல்லது)
    ஆ) ஆண்டிபயாடிக் மற்றும் வலிநிவாரணி பற்றிச் சுருக்கமாக விளக்குங்கள்?
43. அ) அஹிம்சை பட்டு பற்றி விவரிக்க.
    (அல்லது)
    ஆ) பட்டாலைகளில் ஏற்படும் அபாயங்கள் யாவை?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner
www.Padasalai.Net